**Spl.S.C.No.**11/2023 **PW.**35 – விக்னேஷ்வரன் 06.08.2025

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)

**M.P.**1/2025 ல் 14.07.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

ஆரம்பிக்கும் நேரம் 4.00 மணி

அ.த.சா.ஆ.4 ஆவணம் 3 வது பக்கத்தில் இரண்டு தெரியாத நபர்கள் என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. இரண்டு என்ற எழுத்து ஏற்கனவே இயல்பாக எழுதப்பட்டுள்ளது, அது (un) என்பது மட்டும் unknown persons இடைச்சொற்களாக சேர்க்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னால் இருக்கின்ற 1 ஐ 2 ஆக திருத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 18.09.2020 அன்று 9.20 A.M. என்று அ.த.சா.ஆ.4 ல் குறிப்பு உள்ளது என்று சொன்னால் 9.20 என்னுடைய மூத்த மருத்துவர் அட்டென்ட் செய்துள்ளார். person என்பதற்கும், Persons என்பதற்கும் வித்தியாசம் உண்டு என்றால் சரிதான். Person என்றால் ஒருமை, Persons என்றால் பன்மை என்றால் சரிதான். Cause of Death சிவியர் பிரைன் இன்சூரி மற்றும் ஹைபோநியுமோ தொராக்ஸ் (Hypovolumic Shock Severe Brain Injury Pneumothorax Assault) **அது C7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வெட்டு காயம், (கட் இன்சூரி) இன்சஸ் (கிழிந்த காயம்) ஊண்ட் ஆகிய

இரண்டும் ஒரே தன்மையுடையது, அதன் ஓரங்கள் சீராக இருக்கும். லேசரேட்டசர் (சிதைந்த காயம்) இன்சூரிக்கு ஓரங்கள் சீராக இருக்காது. சிதைந்த காயங்கள் மலுங்கலான ஆயுத்தால் ஏற்படும். வெட்டுக்காயம்போல் தோற்றம் அளித்த காயமும் அளிக்கக்கூடியதுண்டு, (இன்சைஸ் லுக்கிங் ஊண்ட்). தோல் சிதைவதினால் ஏற்படும் காயம்தான் இன்சைஸ் லுக்கிங் என்றால் சரிதான். வெட்டு காயம் என்பது வேறு, லேசர் இன்சூரி என்பது வேறு என்றால் சரிதான். இன்சைஸ் லுக்கிங் ஊண்ட்டை கட் லேசரேட்டர் ஊண்ட் என்று எழுதுவோம். அ.த.சா.ஆ.4 மற்றும் அ.த.சா.ஆ.19 வெளிப்புற காயங்கள் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வெளிப்புற காயங்கள் அனைத்தும் கட் லேசரேட்டர் இன்சூரி என்றுதான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீங்கள் இறந்த சடலத்தை அரசு மருத்துவமனைக்கு பிணக்கூராய்வு செய்வதற்காக அனுப்பி வைத்தீர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் முதன் முதலாக சேர்க்கப்படும்போது 1 known persons என்றுதான் சேர்க்கப்பட்டார் என்றும், பிறகு காவல்துறை நிர்பந்தத்தால் 2 unknown persons என்று ஆவணங்கள் புதிதாக பின்னிட்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அ.த.சா.ஆ.19 விபத்து பதிவேடு மற்றும் அ.சா.ஆ.23 Death Intimation ஆகியவை வழக்கிற்கு பின்னிட்டுதான் காவல்துறை வேண்டுகோளின்படி எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சாதாரணமாக ரத்தப்போக்கு இருந்தால் உடனடியாக ரத்தம்

செலுத்தவேண்டி வரும் என்று சொன்னால் சரிதான். ரத்தம் செலுத்தவேண்டும் என்றால் அதனுடைய ரத்த வகை தெரியவேண்டும் என்றால் சரிதான். ரத்த வகையை அவசரமாக கண்டுபிடிக்கவேண்டும் என்றால் சரிதான். அந்த ரத்த வகையை அவசரமாக கண்டுபிடித்து அதை உங்களுடைய Case Sheet ல் எழுதவேண்டும் என்று சொன்னால் சரிதான்.

**முடியும் நேரம் 4.30 மணி**

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**Spl.S.C.No.11/2023 PW25 – அன்பழகன் 06.08.2025**

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)

**M.P.1/2025 ல் 14.07.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**ஆரம்பிக்கும் நேரம் 3.50 மணி**

விபத்து பதிவேட்டை எப்படி பூர்த்தி செய்யவேண்டும் என்பது எனக்கு தெரியும். விபத்து பதிவேட்டில் திருத்தம் செய்யக்கூடாது, அப்படி செய்தால் அதற்கு சுருக்க கையொப்பமோ, கையொப்பமோ செய்யவேண்டும் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் காயம்பட்ட நபரை மருத்துவமனையில் அனுமதிக்கும்போது அவரை யார் அழைத்து வந்தார்கள், எப்போது, எதனால் காயம் ஏற்பட்டது, எப்படி காயம் பட்டது என்ற விபரங்களை சுருக்கமாக குறிப்பிடப்படவேண்டும் என்று சொன்னால் சரிதான். அ.த.சா.ஆ 42 ல் விபத்து பதிவேட்டில் 5 தெரியாத நபர்கள் தாக்கி கழுத்திலும், தலையிலும் வெட்டுகாயம் உள்ளது என ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஒருமைக்கும், பன்மைக்கும் ஆங்கிலத்தில் உள்ள வித்தியாசம் எனக்கு தெரியும். சா.ஆ.42 ல் 5 என்று எழுத்தை திருத்தப்படவில்லை, அசால்ட் வித் என்றுதான் நான் எழுதியுள்ளேன். சா.ஆ.42 வித் என்பதை with என்றுதான் எழுதியுள்ளேன் என்றால் சரிதான்.

சா.ஆ.42 ல் 1 என்று போட்டுவிட்டு அதை 5 என்று திருத்தப்பட்டுள்ளதா என்றால் திருத்தப்படவில்லை. With unknown person என்பதற்கும், with unknown persons என்பதற்கும் உள்ள வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியும். சா.ஆ.42 ல் person என்று ஒருமையில்தான் எழுதியுள்ளேன். சா.ஆ.42 ல் with என்று எழுதவில்லை என்றும், வழக்கிற்காக with என்று எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. நீங்கள் 1 unknown person என்றுதான் எழுதியுள்ளீர்கள் என்றும், பிறகு நீங்கள் அந்த 1 ஐ 5 ஆக திருத்தம் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

**முடியும் நேரம் 4.00 மணி**

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.